டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 12.9.2023 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 22 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 73 - Madurai | Online Edition

# மின்னணு ஏலத்தில் கோதுமை மற்றும் அரிசி வெளிச்சந்தையில் மத்திய அரசு விற்பனை

புது தில்லி, செப்.11

அரிசி, கோதுமை மற்றும் ஆட்டா ஆகியவற்றின் சில்லறை விலையைக் கட்டுப்படுத்துவதற்கான சந்தை இடையீட்டிற்கான மத்திய அரசின் முன்முயற்சியின் ஒரு பகுதியாக, கோதுமை மற்றும் அரிசியின் வாராந்திர மின்னணு ஏலங்கள் நடத்தப்படு கின்றன. 2023-24 ஆம் ஆண்டிற்கான 11-வது மின் ஏலம் 6.9.23 அன்று நடைபெற்றது. நாடு முழுவதும் உள்ள 500 கிடங்குகளில் இருந்து 2.0 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும், 337 கிடங்குகளில் இருந்து 4.89 லட்சம் மெட்ரிக் டன் அரிசியும் வழங்கப்பட்டன.

மின்னணு ஏலத்தில், 1.66 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும், 0.17 லட்சம் மெட்ரிக் டன் அரிசியும் விற்பனை செய்யப்பட்டன. இருப்பு விலையான ரூ.2150வுக்கு எதிராக, எப்.ஏ.க்யு கோதுமை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2169.65 ஆகவும், யூ.ஆர்.எஸ் கோதுமையின் எடையிடப்பட்ட சராசரி விற்பனை விலைகுவிண்டால் ஒன்றுக்கு ரூ.2150.86 ஆகவும் (இருப்பு விலை ரூ.2125) இருந்தது.

இந்தியா முழுவதும் அரிசியின் சராசரி விற்பனை விலை ரூ.2956.19 ஆகவும், இருப்பு விலை ரூ.2952.27 ஆகவும் இருந்தது.

தற்போதைய மின்னணு ஏலத்தில், கோதுமை அதிகபட்சம் 100 டன் வரையிலும், அரிசி 1000 டன் வரையிலும் வழங்கப்படு வதன் மூலம் சில்லறை விலை குறைப்பு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. சிறிய மற்றும் விளிம்பு நிலையில் உள்ள பயனர் களை ஊக்குவிப்பதற்கும், அதிக பங்கேற்பாளர்கள் முன்வந்து அவர்கள் விரும்பும் கிடங்கிலிருந்து அளவை ஏலம் எடுப்பதை உறுதி செய்வதற்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உகையிருப்பு பதுக்கலைத் தவிர்ப்பதற்காக, ஓ.எம்.எஸ்.எஸ் (டி) இன் கீழ் வணிகர்கள் கோதுமை விற்பனை வரம்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். ஓ.எம்.எஸ்.எஸ் (டி) இன் கீழ் கோதுமையை வாங்கிய உற்பத்தியாளர்களின் அரவை ஆலை களில் வழக்கமான சோதனைகள் / ஆய்வுகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. 5.9.23 வரை நாடு முழுவதும் 898 சோதனைகள் செய்யப்பட்டுள்ளன.




# தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மழைக்கான வாய்ப்பு!

சென்னை, செப்.11

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை முதல் 17.9.23 வரையிலான நாட்களில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதி களில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்யக்கூடும். அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்யக்கூடும்.

தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ., வேகத்திலும் வீசக்கூடும். லட்சதீவு பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ., வேகத்திலும் இடை இடையே 55 கி.மீ., வேகத்திலும் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# TNAU அக்ரிகார்ட்-ஓர் பார்வை



வேளாண்மையில் தமிழ்நாடு இந்தியா விலேயே முதன்மை மாநிலமாக இருந்தாலும், தற்பொழுது வேளாண்மை பல சவால் களை சந்தித்து வருகிறது. குறிப்பாக உழவர்களுக்கு தகுந்த நேரத்தில் பண்ணைக்கு வேண்டிய வேளாண் இடு பொருட்களை உழவர்களின் வீடுகளுக்கே விநியோகம் செய்வதுமிக பெரிய சவாலாக உள்ளது. உழவர்கள் சில நேரம் தரமான இடுபொருட் களை பெற அதிக நேரம் மற்றும் செலவு செய்யவேண்டியுள்ளது. இதனை சரி செய்ய தமிழ்நாடு அரசின் ஒரு தொடர் முயற்சியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உற்பத்தி செய்யும் விதைகள் மற்றும் இடுபொருட்கள் உழவர்களின் வீடுகளுக்கே நேரடியாக ஆன்லைன் மூலம் விற்பனை செய்யும் இணைய தளத்தை வேளாண்ப ல்கலைக்கழகம் உள்ளது. TNAU AgriCart (டிஎன்ஏயு (அக்ரிகார்ட்) என்ற வேளாண் இடுபொருட்களை விற்பனை செய்யும் ஆன்லைன் இணையதளம் துவங்கப்பட்டு உள்ளது. மேலும் உழவர்கள் ஆன்லைன் மூலமாகவே பணம் செலுத்தும் வசதியும் இதில் உள்ளது. வேளாண் பருவங்கள் தொடங்கும் முன் வேண்டிய பயிர் இரகங்களின் விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் குறிப்பாக உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், பயிர் பூஸ்டர்கள் போன்றவைகள் ஆன்லைன் மூலம் வாங்கி பருவத்தே பயிர் செய்து உழவர்கள் பயனடையலாம்.

அமேசான் மற்றும் பிளிப்கார்ட் ஆன்லைன் இணையதளத்தில் பொதுமக்கள் எவ்வாறு அனைத்து பொருட்களையும் ஆன்லைன் மூலம் வாங்குகிறார்களோ அதேபோல் இந்த தளத்தில் உழவர்கள் ஆன்லைன் மூலம் இடுபொருட்கள் மற்றும் விதைகளை வாங்க முடியும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்பொழுது வேளாண்மைத் துறையுடன் இணைந்து உழவர்களிடையே நல்ல தொடர்பை ஏற்படுத்தி வருகிறது. இதனால் உழவர்கள் புதிக கண்டுபிடிப்புகளை உடனடியாக வயலில் கடைபிடிக்க வழிவகை செய்து வேளாண் உற்பத்தியை பெருக்கி, உழவர்களின் வருமானமும் உயர வழிவகை செய்யும். இந்த இணையதளத்தை அனைத்து உழவர்களும் சிறப்பாக பயன்படுத்தி தமிழ்நாட்டின் வேளாண் பொருளாதாரத்தை மேலும் உயர்த்திட வேண்டும்.

**தகவல் : வேளாண்மை உதவி இயக்குனர், கொடுமுடி.**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


HEALTHY CROPS
HAPPY FARMER
SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# கரும்பில் மஞ்சள் நோய் கள ஆய்வு



கடலூர், செப்.11

வேளாண்மை அறிவியல் நிலையமும் வேளாண்மை துறையும் இணைந்து ஸ்ரீ முஷ்ணம் வட்டாரத்தில் உள்ள இ.கீரனூர், மருங்கூர், மேல பளையூர் மற்றும் அ.வல்லியம் போன்ற கிராமங்களில் 9.9.23 அன்று கரும்பில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் க. செங்குட்டுவன், மண்டல ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானி முனைவர் வே.இரவிச் சந்திரன் மற்றும் ஸ்ரீமுஷ்ணம் வேளாண்மை அலுவலர் அமுதா ஆகியோர் கொண்ட குழு ஆய்வு செய்து அதற்கான தீர்வுகளையும் வழங்கியுள்ளது.

அறுவடைக்கு தயாராக இருக்கும் கரும்பில் மஞ்சள் நோய் காணப்பட்டது. அவை இலையின் நடு நரம்பு முதலில் மஞ்சளாக வும் பிறகு இலை முழுவதும் மஞ்சளாக காணப்படுகிறது. அதிக தாக்குதலுக்கு உன்டான வயல்கள் இலைகள் கருகியும் வளர்ச்சி குன்றியும் காணப்பட்டது.

இந்நிலையில் மேலாண்மை முறைகளை மேற்கொள்வ தினால் எந்த பயனும் இல்லை. அறுவடைக்கு பின் வெள்ளை கரும்பு என்று சொல்லகூடிய போந்த கரும்பு கட்டைகளை முழு வதுமாக அகற்றி புதிய இரகத்தை நடுவதற்கு பரிந்துரைக்கப் படுகிறது.

இளம் கரும்பில் மஞ்சள் நோய் காணப்பட்டால் ஏக்கருக்கு கரும்பு பூஸ்டர் 1, 1.5 & 2 கிலோ 40, 60 மற்றும் 75 நாட்களில் இட வேண்டும். ஏக்கருக்கு 27 கிலோ தழைச்சத்து 27 கிலோ வேப்பம் புண்ணாக்கினை நடவு செய்த 30, 60 மற்றும் 90 நாட்களில் இட வேண்டும். மண் பரிசோதனை செய்யப்பட வில்லையெனில் அடியுரம் பொதுப்பரிந்துரையாக தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து முறையே ஏக்கருக்கு 120:40:80 கிகி அளிக்க வேண்டும். சூப்பர் பாஸ்பேட் (250 கிகி), துத்தநாக சத்து மற்றும் இரும்புச் சத்துக் குறைபாடு உள்ள வயல்களில் முறையே 37.5 கிலோ/எக் துத்தநாக சல்பேட் மற்றும் 40 கிலோ பெரஸ் சல்பேட் இடுதல் வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் - 606 001, தொலைபேசி : 04143 238353, மின்னஞ்சல் : kvkvri@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# மிளகுப் பயிரில் நூற்புழுத் தாக்குதல்

நூற்புழுக்கள் கண்ணிற்க்கு புலப்படாத, நிறமற்ற, நீர் சார்ந்து வாழும் நூல் போன்ற நுண்ணுயிரினம் ஆகும். அவை இனங்களைப் பொறுத்து தாவரங்களுக்கு நன்மை பயக்கும் மற்றும் தீங்கு விளைவிக்கும். மிளகு செடிகளின் சூழலில், தீங்கு விளைவிக்கும் பல நூற்புழு இனங்கள் உள்ளன, அவை வேர்களுக்கு சேதம் விளைவிக்கும் மற்றும் இறுதியில் தாவர ஆரோக்கியத்தையும் உற்பத்தித்திறனையும் குறைக்கின்றன.

**மிளகு செடிகளின் நூற்புழு பூச்சிகள் பற்றிய சில விரிவான தகவல்கள் இங்கே:**

**1. வேர் முடிச்சு நூற்புழுக்கள் (மெலாய்டோகைன் சிற்றினம்)**

**இனங்கள் :** மெ. இன்காக்னிடா, மெ.ஜவானிகா மெ. அர்னேறீயா போன்ற மெலாய்டோகைன் இனத்தில் உள்ள பல இனங்கள் மிளகு செடிகளில் பொதுவான நூற்புழுக்கள் ஆகும்.

**சேதம் :** வேர் முடிச்சு நூற்புழுக்கள் வேர் அமைப்பைத் தாக்கி, வேர்களில் சிறிய முடிச்சுகளை உருவாக்குகின்றன. இது தாவரத்தின் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சும் திறனைத் தடுக்கிறது, இது வளர்ச்சி குன்றி, வாடி, மற்றும் மகசூல் குறைவதற்கு வழிவகுக்கிறது.

**வாழ்க்கைச் சுழற்சி :** நூற்புழுக்கள் ஒட்டுண்ணி மற்றும் சுதந்திரமான வாழ்க்கை நிலைகளைக் கொண்ட சிக்கலான வாழ்க்கைச் சுழற்சியைக் கொண்டுள்ளன. அவை பல ஆண்டு களாக மண்ணில் நிலைத்திருக்கும்.

**2. தேம்பல் நூற்புழுக்கள் (பிராட்டிலென்கஸ் சிற்றினம்)**

**இனங்கள் :** பிராட்டிலென்கஸ் சிற்றினம் மிளகு செடிகளை பாதிக்கும் நூற்புழுக்களின் மற்றொரு குழுவாகும்.

**சேதம் :** தேம்பல் நூற்புழுக்கள் வேர் திசுக்களை உண்கின்றன. பழுப்பு கலந்த கருப்பு நிற சிதிலமடைந்த வேர்க்காயங்களை உருவாக்குகின்றன மற்றும் பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளால் இரண்டாம் நிலை தொற்றுகளை ஏற்படுத்துகின்றன. இது வேர் சிதைவு, ஊட்டச்சத்து கடத்தல் குறைதல் மற்றும் ஒட்டுமொத்த தாவர வளர்ச்சி குறைபாட்டிற்கு வழிவகுக்கும்.

**வாழ்க்கை சுழற்சி :** தேம்பல் நூற்புழுக்கள் என்பவை தாவர உள் ஒட்டுண்ணிகள் ஆகும். இவை தாவர வேர்களை, தாவர வேர்வழி வெளிவிடு திரவங்களை அடையாளம் கண்டு, வேர் உள் நுழைந்து பாதிப்பை உண்டாக்குகின்றன.

**3. ஈட்டி நூற்புழுக்கள் (ஸிபினிமா சிற்றினம்)**

**இனங்கள் :** (ஸிபினிமா சிற்றினங்கள், ஈட்டி போன்ற அலகு களை கொண்ட, மிளகு செடிகளையும் சேதப்படுத்தும் நூற்புழு இனங்கள் ஆகும்.

**சேதம் :** ஈட்டி நூற்புழுக்கள் தாவர–நோய்க்கிருமி வைரஸ்களை மிளகு செடிகளுக்கு கடத்துவதன் மூலமாக வெளிர் நிற இலைகளை கொண்ட வளர்ச்சி குன்றிய தாவர குறைபாடுகளை உண்டாக்குகின்றன. இது நோய்களுக்கு வழிவகுக்கும் மற்றும் விளைச்சலைக் குறைக்கும்.

**வாழ்க்கைச் சுழற்சி :** ஈட்டி நூற்புழுக்கள், தேம்பல் நூற்புழு இனங்கள் போன்றே தாவர வேர் உள் ஒட்டுண்ணி உணவு சார்பு மற்றும் வாழ்க்கை சுழற்சி முறையை கொண்டுள்ளன.


**4. கொடுக்கு நூற்புழுக்கள் (பெலனொளைமஸ் சிற்றினம்)**

இனங்கள் : கொடுக்கு நூற்புழுக்கள் மிளகு செடிகளுக்கு தீங்கு விளைவிக்கும் மண்ணில் வாழும் நூற்புழு இனங்கள் ஆகும்.

**சேதம் :** இவை தாவர வேர் உட்புற பாரன்கைமா திசுக்களை உண்பதால் வேர் சிதைவுகளை உண்டாக்கி பயிர் சேதம் உண்டாக்குகின்றன.



முதிர்ந்த வேர் முடிச்சு பெண் நூற்புழுக்கள்



ஈட்டி நூற்புழு

தகவல் : **அ.அருண், செ.க.சந்தீப், ச.மோகன் குமார் மற்றும் கு.வெங்கடேஷ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641003.**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# பருத்தி விதைகளை அதிக விலைக்கு விற்பனை செய்தால் நடவடிக்கை

விருதுநகர், செப்.11

விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் காய்ப்புழு எதிர்ப்பு தன்மையுடைய (மரபணு மாற்றம் செய்யப்பட்ட) பிடி பருத்தி விதைகள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

வீரிய ஒட்ட ரக பருத்தி விதை விற்பனை செய்ய மத்திய அரசு விலை நிர்ணயித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன் படி விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உரிமம் பெற்ற




விற்பனை நிலையங்கள் வீரிய ஒட்டு ரக பருத்தி (பி.டி) விதைகள் 475 கிராம், 853 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் விவசாயிகளும் இந்த விலைக்கே பருத்தி விதை வாங்க வேண்டும். அரசு நிர்ணயித்துள்ளதை விட கூடுதல் தொகைக்கு விதை விற்பனை செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், விதை விற்பனையாளர்கள் பருத்தியை தவிர்த்து இதர விதைகள் வீரிய மக்காச்சோளம், வீரிய சோளம், வீரிய கம்பு, போன்றவை, விதை பாக்கெட்டில் உள்ள அதிக பட்ச விற்பனை விலைக்கு (MRP) மிகாமல் விற்பனை செய்ய வேண்டும். விவசாயி களும், பாக்கெட்டில் உள்ள அதிகபட்ச விற்பனை விலையை (MRP) கண்காணித்து விதைகளை வாங்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் (MRP) விலையை விட கூடுதல் விலைக்கு விற்றால், நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் ஆ.வனஜா எச்சரித்துள்ளார்.

# அட்மா திட்டத்தின் கீழ் நீடித்த நவீன கரும்பு சாகுபடி பயிற்சி



அரியலூர், செப்.11

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரத்தில் 2022-23 ஆண்டின் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட பஞ்சாயத்துகளில் ஒன்றான நாகம் பந்தல் கிராமத்தில் வேளாண் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா திட்டம் மூலம் விவசாயிகளுக்கு நீடித்த நவீன கரும்பு சாகுபடி குறித்த மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் ந.ராஜலெட்சுமியின் அறிவுரையின் பேரில் நடத்தப்பட்டது. வேளாண்மை துணை அலுவலர் குணசேகரன் அவர்கள் பேசுகையில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடியின் முக்கிய தொழில்நுட்பங்களான நிலம் தயார் செய்தல், விதை கரும்பு தேர்வு மற்றும் கரணைகள் தயார் செய்தல், நடவு, உரம் மேலாண்மை, கலை மேலாண்மை, ஊடுபயிர் சாகுபடி, சொட்டு நீர் பாசன அமைப்பு மூலம் உரம் அளிப்பு முறைகள் குறித்து விளக்கினார். மேலும், கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் துறையின் மூலம் வழங்கப்படும் பல்வேறு மானிய விபரம் குறித்து எடுத்து கூறினார். நிழல் வலை குடில் ஒரு பரு கரணைகள் கொண்டு கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் மற்றும் கரும்பு நாற்றுகள் மூலம் நடவு செய்வதால் கிடைக்கும் பயன்கள் குறித்தும் விளக்கினார். வேளாண்மை உதவி அலுவலர் பழனிவேல் பேசுகையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கிப் பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள மானிய இடுபொருட்கள் பற்றி எடுத்துரைத்தார். முன்ன தாக அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜயகுமார் வரவேற்று பேசுகையில் இ- நாம், உழவன் செயலி போன்ற பயனுள்ள செயல்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத் தார். பயிற்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் குமணன் செய்திருந்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் பயிற்சி



திண்டுக்கல், செப்.11

திண்டுக்கல் மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பில் வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 'உழவர் விவாதக்குழு' அமைப்பாளர்கள் பயிற்சி நேற்று நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் ரெ.கீதா தலைமை தாங்கினார். வடமதுரை வேளாண்மை அலுவலர் க.இராமசாமி கலந்து கொண்டு






விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் சி.ரேஷ்மா கலந்து கொண்டு உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் 'Agrikart' என்ற online நேரடி கொள்முதல் பற்றியும், இயற்கை மற்றும் அங்கக வேளாண்மை பற்றியும் எடுத்துரைத்தார். வடமதுரை துணை வேளாண்மை அலுவலர் ம.தங்கராஜ், இயற்கை பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் பயிர் ஊக்கிகள் தயாரிப்பது பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். வடமதுரை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ஐ.சிங்கத்துரை, உழவன் செயலியின் பயன்பாடுகள் பற்றி விளக்கினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள், மு.ஐயப்பன் மற்றும் ரா.ஜெகநாதன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

**தடுப்பூசி செலுத்திக் கொள்வோம்**

# சீர்மிகு சிறுதானியங்கள்-ஓர் கண்ணோட்டம்



தமிழர்களின் பாரம்பரிய உணவு பயிர்களான வரகு, கம்பு, குதிரைவாலி, தினை, சாமை, ராகி (கேப்பை) பனிவரகு போன்றவை இருந்தன. ஆனால் காலப் போக்கில் நாகரீகம் என்ற போர்வையில் உணவு பழக்கம் மாறத் தொடங்கிய பின் இவைகள் படிப்பாக உணவு தட்டிலும் சாகுபடி நிலத்திலும் காணாமல் போய்விட்டது. இன்று இதன் மீது மக்கள் ஆர்வம் காட்டத் துவங்கி விட்டனர்.

**எதனாலே இந்த ஆர்வம் சிறுதானியத்தின் மீது தெரியுமா?**

'பட்டால் தான் தெரியும்' என்ற முதுமொழிக்கேற்ப தவறான உணவு பழக்க வழக்கங்களால் (அரிசி, கோதுமை) மொத்த ஆரோக்கியத்தை இழந்ததை தொடர்ந்து, மக்களிடத்தில் சிறுதானிய மோகம் ஆர்வம் ஏற்பட்டது. நமது முன்னோர்கள் (தாத்தா, பாட்டி) காலத்துல எந்தவித நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக 90, 100 வயது வரை தெம்பாக வாழ்ந்து வந்தனர். இன்றைய நம் தலை முறையினர் 40, 50, வயதிலேயே மருந்து மாத்திரைக்கு அடிமையாக வாழ்ந்து வருகின்றனர் என்றால் முழுக்க முழுக்க அரிசி உணவின் பயன்பாட்டால் இன்றைய சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நீரிழிவு நோய்க்கும் கொழுப்பு சத்துக்கும் ஆளாகி உள்ளனர். இதனால் முன்பு ஏழைகளின், விவசாயிகளின் உணவாக இருந்து வந்த சிறுதானியங்கள் இன்றைய காலத்துல பணக்காரர்களின் உணவாக மாறிவிட்டது. ஏன். தற்போது தில்லியில் நடைபெற்ற 20G SUMMIT மாநாட்டில் கூட அனைத்து உலக பிரதிநிதிகளுக்கும் சிறப்பு உணவாக சிறுதானியங்களில் இருந்து விதவிதமாக தயாரிக்கப்பட்ட உணவு பண்டங்கள் பரிமாறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறுதானியங்கள் காணாமல் போனது எப்படி?**

நாளடைவில் பசுமை புரட்சியின் (1960) விளைவாலும் இரசாயன உரம் பயன்பாட்டினால் நெல், கோதுமையில் புது புது இரகங்கள் வருகையால் விளைச்சல் அதிகரிக்க தொடங்கியது.

பருத்தி மற்றும் கரும்பு போன்ற பணப்பயிரால் விவசாயிகள் படிப்படியாக சிறுதானியங்களை மறந்து போய் விட்டனர். நாட்டு விதைகள் கூட சிறு தானியங்களில் அழிய தொடங்கி விட்டன. மேலும் ரேசன் கடையில் அரிசி, கோதுமை வழங்கி வருவதால் மக்கள் தங்களுடைய உணவு தட்டியில் சிறு தானியங்களுக்கு இடம் தராத நிலையில் தான் இருந்து வந்தது. தற்போது இந்த ஆண்டு 2023 ‘சர்வதேச சிறுதானிய ஆண்டாக‘ இந்தியாவின் பரிந்துரைக்கேற்ப ஐ.நா. சபை அறிவித்துள்ளது. குறிப்பிடத் தக்க நிகழ்வாகவாக, சிறுதானிய பயிருக்கு மறுவாழ்வுடன் நிரந்தர எதிர்காலம் உள்ளது.




**மற்ற பயிர்களுடன் எந்த விதத்தில் சிறுதானிய பயிர்கள் உசத்தி தெரியுமா?**

1) மற்ற பயிருக்கு அதிகளவு நீர் தேவை. இதற்கு குறைந்த பட்ச நீர் மழையை நம்பி விளையக்கூடியது. வறட்சி யை தாங்கி வளரக்கூடியது.

2) இரசாயன உரங்கள், பூச்சி மருந்து தேவை இல்லை.

3) வளம் குறைந்த நிலத்திலும் வளரக்கூடியது.

4) ஒரு களை எடுத்தாலே போதுமானது.

5) சாகுபடி செலவு மிக மிக குறைவு.

6) தற்போது தேவை அதிகரிப்பதால் விற்பனையில் குறையில்லை.

7) புது புது இரகங்கங்கள் வரத்தொடங்கிவிட்டன. (குதிரை வாலி மதுரை1)

8) அத்தியேந்தலில் சிறுதானிய மகத்துவ மையம்.

9) சிறுதானிய உற்பத்தி அதிகரிக்க மத்திய, மாநில அரசின் நடவடிக்கைகள் (மானியம்).

10) தர்மபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களில் சிறு தானியங்கள் (ராகி) பொது வினியோக திட்டத்தில் வினியோகம் செய்தல் போன்ற காரணங்களால் சிறுதானிய சாகுபடி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

**இன்றைய நிலையில் சிறுதானியங்கள்**

சர்வதேச சிறுதானிய ஆண்டாக இந்த ஆண்டு கொண்டாடப் பட்டு வருகின்ற நேரத்தில் (ONE DISTRICT ONE PRODUCT)




என்ற திட்டத்தில் தர்மபுரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் சிறுதானிய மாவட்டங்களாக அறிவித்து சாகுபடியில் விழிப் புணர்வு, விவசாயிகளிடம் ஏற்படுத்து வருகிறது. தமிழகத்தில் 1980ல் 15 லட்சம் ஹெக்டேராக இருந்த சிறுதானிய சாகுபடி மற்ற பயிர்களின் வரத்தால் தற்போது 6 லட்சம் ஹெக்டேராக குறையத் தொடங்கியுள்ளதை மீண்டும் அதிகரிக்க இந்த ஆண்டிலே நடவடிக்கை எடுப்பதுடன் தற்போது புரட்டாசி பட்டத்தில் சிறுதானிய ங்களை சாகுபடி செய்வோம். சீரான வருமானம் பெறுவோம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ‘மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்’ விழிப்புணர்வு பேரணியில் வேளாண் மாணவர்கள்




கடலூர், செப்.11

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண் புலத்தில் நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண் அறிவியல் பயின்று வருகிற மாணவர்கள், கல்வி இணைச் செயல்பாடாக கடலூர் – பரங்கிப்பேட்டை வட்டத்தின் சிலம்பிமங்கலம் சிற்றூரில் தங்கி ஊரக வேளாண் பணி அனுபவம் மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, சிலம்பிமங்கலம் ஊராட்சி ஒன்றிய மேல்நிலைப்பள்ளியில் ‘மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்‘ என்ற பொருண்மையில் ஊர்வலம் நடத்தினர். அதில் பதாகைகள் ஏந்தி ஆறு மற்றும் ஏழாம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர். இன்றைய நவீன சூழலில் செயலிழந்த இதயத்திற்கு மாற்று இதயம் உண்டு, சிறுநீரகத்திற்கு மாற்று உண்டு, ஆயின் ஆக்சிசன் என்ற உயிர்வளி தருகிற மரத்திற்கு மாற்றாக நிகர் படைப்பை நோக்கிய நம் தேடல் நிறைவு பெறாது. எனவே, மரத்தின் தேவையைக் கருதி ஊர்வலத்தில் மாணவர்கள் கலந்துக் கொண்டதை ஊர்மக்கள் வரவேற்றனர். இது குறித்துப் பேசிய குழு மாணவத் தலைவர், அடுத்த தலைமுறையை மிகச் சரியான பாதையை நோக்கி நகர்த்த முற்படுவோம் என உறுதி பூண்டார்.



# மணமேல்குடி அருகே கால்நடை வளர்ப்பு குறித்து மகளிருக்கான தொலைபேசி வழி ஆலோசனை நிகழ்ச்சி




புதுக்கோட்டை, செப்.11

புதுக்கோட்டை மாவட்டம், மணல்மேல்குடி அருகே பட்டங்காடு கிராமத்தில் தனித்து வாழும் பெண்களுக்கான கால்நடை வளர்ப்பு குறித்து தொலைபேசி வழி ஆலோசனை நிகழ்ச்சி ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் வேர்டு தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேர்டு தொண்டு நிறுவன இயக்குநர் ஆர்.கே.தாஸ் தலைமை வகித்தார். ரிலையன்ஸ் அறக் கட்டளையின் மாவட்ட மேலாளர் இரா.அன்பழகன் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்து நடத்தினார். கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு கால்நடை மருத்துவ ஆலோசகர் மருத்துவர் திருநாவுக்கரசு ஆலோசனைகள் வழங்கினார்.

இந்நிலையில் கால்நடைகளுக்கான தடுப்பூசிகள், தீவன மேலாண்மை. நோய்களை கண்டறிவது மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள். பராமரிப்பு முறைகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பட்டங்காடு மேலஸ்தானம், உசிலாங்காடு, வடக்கு அம்மாபட்டிணம், மணமேல்குடி, ஆகிய ஊர்களைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**முகக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக முகக் கவசம் அணிவோம்**

# ஊட்டச்சத்து காய்கறிகள் தோட்டம் அமைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



கடலூர், செப்.11

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் G3 குழுவை சார்ந்த மாணவிகள் 16 பேர், பல்கலைக்கழக இணை பேராசிரியர் முனைவர் வி.சக்திவேல் வழிகாட்டுதலின்படி, பரங்கிப்பேட்டை அடுத்த அகரம் கிராமத்தில் 2 1/2 மாதங்கள் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின் றனர். அதன்படி நேற்று முன்தினம் அந்த கிராமத்தில் உள்ள தேசிய நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் ஊட்டச்சத்து காய்கறிகள் தோட்டம் அமைத்தனர். அதில் அவரை, கீரை வகைகள், வெண்டைக்காய் ஆகிய விதைகளை பயிரிட்டனர்.




# தென்னையில் வேர் வாடல் நோய் மேலாண்மை பயிற்சி



கடலூர், செப்.11

வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தென்னையில் வேர் வாடல் நோயிக்கும் பூச்சி மற்றும் பிற நோய் மேலாண்மைக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை கடலூர் மாவட்டத்தின் வேளாண்மை இணை இயக்குநர் ச.கண்ணயா தலைமை ஏற்று நடத்தினர். பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொழில் நுட்பத்தை 40 கடலூர் வேளாண்மை விரிவாக்க அலுவலர் களுக்கு 9-9-23 அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியை வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பொறுப்பு க.செங்குட்டுவன், வரவேற்புரை வழங்கினார். மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ரெ.பாஸ்கரன், உர மேலாண்மை முறையில் பெருன்ம்பாளான பூச்சி மற்றும் நோய் வருவதை தடுக்க முடியும் என்பதை எளிய முறையில் எடுத்துரைத்தார். அடுத்ததாக மத்திய திட்டத்தின் துணை இயக்குநர் கென்னெடி ஜெபக்குமார் வாழ்த்துரை வழங்கும் போது பயிற்சியின் நோக்கத்தையும் நோய் பாதிப்பு கணக்கெடுப்பு மகசூல் கொடுக்காத தென்னை மரங்களை அகற்றி புதிய கன்றுகளை வழங்கும் திட்டத்திற்கு வழி வகுக்கும் என்று எடுத்துரைத்தார். அடுத்ததாக தென்னையில் வேர் வாடல் நோய் அறிகுறிகள் மற்றும் கணக்கெடுத்தால் தொடர்பான தொழில்நுட்ப உரையை முனைவர் வே. இரவிச்சந்திரன் மற்றும் முனைவர் மு. பரமசிவம் ஆகியோர் வழங்கினார்கள். தென்னையில் கருந்தலை புழு, ருகோஸ் வெள்ளை ஈ, கண்டமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டு ஆகிய பூச்சிகள் தாக்கத்தை கணக்கெடுப்பதற்கும் அவற்றின் மேலாண்மை முறைகளை மேற்கொள்வதற்கும் நவீன தொழில் நுட்பத்தை க.செங்குட்டுவன் விளக்கினார். பயிற்சியின் நிறைவாக முனைவர் மு.பரமசிவம் நன்றியுரை வழங்கி பயிற்சியை இனிதே முடித்து வைத்தார்.

# தொடக்கப் பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழா



கடலூர், செப்.11

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டு பயிலும் வேளாண் மாணவிகள் 15 பேர், பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் முனைவர் வீ.சண்முகராஜா வழிகாட்டுதலின்படி , பி.முட்லூர் கிராமத்தில் 3 மாதங்கள் தங்கி பயிற்சி பெற்றுவருகின்றனர். அதன்படி தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியர் கயல்விழி தலைமையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாணவிகள் மரங்களின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தனர். மேலும், தலைமை ஆசிரியர் மற்றும் மாணவிகள் மரக்கன்றுகளை நட்டனர்.



# நெல் சாகுபடியில் களர் நில மேலாண்மை தொழில்நுட்பங்கள் களப்பயிற்சி



கடலூர், செப்.11

வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் (11.09.2023) அன்று நெல் சாகுபடியில் களர் நில மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றிய கள பயிற்சி பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் உள்ள சின்னக்குமட்டி கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சில் களர் நிலத்திக்கேற்ற புதிய நெல் இரகங்கள் திருச்சி




3/ 5 மற்றும் சி எஸ் ஆர் 56 பற்றியும் களர் நில சீர் திருத்த தொழில் நுட்பங்களான இயந்திர வழி முறை உப்புகளை சுரண்டுதல் பாசன நீரை சுத்தகரிப்பு கசிவு தேவை மற்றும் பயிர் பாதிப்பு பற்றி கூறப்பட்டது. மேலும் விதை நேர்த்தி நேரடி நெல் விதைப்பு உயிர் உரங்கள் பயன்பாடு பயிர் சுழற்சி கைபேசி நெல் செயலி தமிழ்நாடு வேளாண்மை இணைய தளம் மற்றும் உழவரின் வளரும் வேளாண்மை மாத இதழ் பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியில் முனைவர் நூர்ஜஹான் முனைவர் காயத்ரி முனைவர் வீரமணி தொழில்நுட்ப உரை ஆற்றினர். 30 விவசாயிகள் மற்றும் பரங்கிப்பேட்டை உழவர் உற்பத்தியாளர் உறுப்பினர்கள் பங்கேற்று பயனடைத்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.